செ.வெ.எண்: 20/மார்ச்                                                                  நாள்: 10.03.2016

# இராமநாதபுரம் மாவட்டத்தில்

## நடைபெறவிருக்கும் 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படும்

## வாக்காளர் விழிப்புணர்வு பேரணியைத் துவக்கி வைத்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு தேர்தல் முன்னேற்பாடு பணிகள் கிராமங்கள் வாரியாக துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் பல்வேறு அரசு துறைகளின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.03.2016) இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் தலைமையேற்று துவக்கி வைத்தார்.

முதலாவதாக இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடலாடி வட்டம், எஸ்.தரைக்குடி கிராமத்திலும், தொடர்ந்து செவல்பட்டி கிராமத்திலும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும் செவல்பட்டி கிராமத்தில் உள்ள பொது மக்கள் அனைவரும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

அதன்பின்பு இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்திலிருந்து மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்தின் சார்பாக அங்கன்வாடி பணியாளர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மேலும் வருகின்ற 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் தொடர்ந்து பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**